அசல்

(188) 9.7.42. கி.வா. ஜகந்நாதன்

அசி–1

திருவல்லிக்கேணி

உ
முருகன் துணை 9.7.'42

G.137

அநேக நமஸ்காரம். உபயகுசலோபரி.

நான் 6-ஆம் தேதி எழுதிய கடிதம் கிடைத்திருக்கு
மென்று எண்ணுகிறேன்.

பாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தை ஸ்ரீ வித்துவான்
வைத்தியநாதையர் எழுதி வருகிறார். தசமஸ்கந்தக் குறிப்
புக்களை ஸ்ரீ வேணு கோபாலையர் எழுதி வருகிறார்.

சீவகசிந்தாமணி நான்கு நாட்களாகப் புரூப் வரவில்லை.

சரித்திர சம்பந்தமாகத் தாங்கள் எழுதிய குறிப்புக்
களைப் பதிந்துகொண்டேன். 1902-ஆம் வருஷம் முடியக்
கடிதக் குறிப்புக்களை மாத்திரம் குறித்திருக்கிறேன்.
மேலும் குறித்து வருகிறேன். செய்யுட்களையும், பத்தி
ரிகைத் துண்டுகளையும், பிரதி செய்யப்படாத கடிதங்
களையும், அவ்வப்போது குறித்து வந்த சிறுகுறிப்புக்
களையும், முகவுரைகளையும் பார்த்து அவற்றிலுள்ள
செய்திகளையும் இணைத்துப் பிறகே எழுதத் தொடங்க
வேண்டும். சென்னைக்கு வரும்வரையில் உள்ளவற்
றை முதலில் தொகுத்து வைக்க எண்ணுகிறேன்.

ம.ரா.ரா.ஸ்ரீ விசுவநாதையரவர்கள் திங்களன்று
மாலை இங்கே வந்திருந்தார்களாம். நான் காரியால
யத்திலிருந்து வர நேரமாயினமையின் அவர்களைச்
சந்திக்கக் கூடவில்லை.

சி. சங்கரனிடம் சில கடிதங்கள் கொடுத்தேன்.

அசல்

188

9.7.42. கி. வா. ஜகந்நாதன்

அசல்-1



பிரதி செய்தான். இன்னும் சிலவற்றைக் கொடுத்திருக்கி
றேன்.

செட்டியாரவர்கள் சரித்திரத்தில் 12 பாரங்கள்
ஆகியிருக்கின்றன. காகிதவிலை பற்றிப் பின்பு யோசித்
துக் கொள்ளலாமே.

ஸ்ரீ. வேணுகோபாலையர் அடுத்தவாரம் ஊருக்குப் போய்
4 நாள் இருந்துவிட்டு வருவதாகச் சொல்கிறார். 15-ஆம்
தேதி இரவு புறப்படக்கூடும்.

கலைமகள் காரியாலயத்தில் இப்போது சேர்ந்திருக்
கும் ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்யாரென்பவர் முன்பு
ஹிந்தி பிரசார ஸபையில் இருந்தார். ஸ்ரீமத் ஐயரவர்கள்
கட்டுரைகள் சிலவற்றை ஹிந்தியில் மொழிபெயர்த்
திருக்கிறார்.

ரேடியோ பிரசங்கம் வெளிவந்த "வானொலி" இதழை
அனுப்பியிருக்கிறேன். அதில் ஓரிடத்தில் ஒரு வாக்
கியம் விட்டுப் போயிருக்கிறது. நான் முன்பு
கொடுத்த கையெழுத்துப் பிரதியிலிருந்து அதைத்
திருத்திக்கொள்ளலாம். ரேடியோ நிலயத்திலிருந்து
அனுமதி கிடைத்தது தெரிந்தது.

கடிதக் கட்டுகளில் தேதி தெரியாதவை தனியே
ஒரு கட்டாக உள்ளன. அவற்றைப் பார்த்துச் சந்தர்ப்
பம் நோக்கித் தேதி நிச்சயம் செய்யலாம். அந்தக்
கட்டையும், தேதி ஜந்த்ரியையும் அனுப்பப்
பிரார்த்திக்கிறேன்.

அசல்

(188) 9.7.42. கி. வா. ஜகந்நாதன்

அசலி—1

(3)

அங்கே குழந்தையின் அப்தபூர்த்தி வைதிக விசேஷங்கள் குறையாமல் நடைபெறக் கூடுமே. நானும் வருவதற்கு மனமிருந்தது காரியாலய வேலைகள் இடங்கொடுக்கவில்லை. குழந்தை தீர்க்காயுளும் இருவகைச் செல்வமும் பெற்று விளங்கும் வண்ணம் ஸ்ரீ ஷண்முகநாதன் திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

என்னுடைய நமஸ்காரங்களை யாவர்க்கும் சொல்ல வேண்டும்.

இங்ஙனம்,
அன்பன்
கி. வா. ஜகந்நாதன்

அசல்

(188)

9.7.42. கி.வா. ஜகந்நாதன்

அசல்-1

9.7.42

(188)